நோயாளி தகவல் கையேடு

# குளோபிடோகிரெல்

(CLOPIDOGREL)

# டைகுளோபிடீன்

(TICLOPIDINE)

MINISTRY OF HEALTH
SINGAPORE

SINGHEALTH / PIL / T130R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

**டைகுளோபிடீன் (Ticlopidine) மற்றும் குளோபிடோகிரெல் (clopidogrel) மருந்துகள், பக்கவாதம் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. பக்கவாதம் ஏற்கனவே தாக்கியவர்களுக்கும், சில மருத்துவப் பிரச்சினைகள் இருப்பதால் பக்கவாதம் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளவர்களுக்கும் இந்த மருந்துகள் தரப்படுகின்றன.**

**மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் ஒரு இரத்தக் கட்டியினால் தடைபடும்போது பக்கவாதம் நிகழ்கிறது. டைகுளோபிடீன், குளோபிடோகிரெல் ஆகிய இரண்டுமே தீங்குமிக்க இந்த இரத்தக் கட்டி உருவாகும் சாத்தியத்தைக் குறைக்கின்றன. எனினும், இம்மருந்துகள் சிலரிடத்தில் கடுமையான இரத்தப்போக்கு உண்டாகும் அபாயத்தையும் அதிகரிக்கச் செய்யலாம்.**

பின்வருபவை இருந்தால், இந்த மருந்தைப் பயன்படுத்துவதற்கு முன்பாக மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- உங்களுக்கு டைகுளோபிடீன் அல்லது குளோபிடோகிரெல் மருந்துக்கு ஒவ்வாமை இருத்தல்.
- நீங்கள் கர்ப்பமாக இருத்தல் அல்லது தாய்ப்பால் கொடுத்து வருதல்.
- விரைவில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளப் போகிறீர்கள் (பல் அறுவைச் சிகிச்சை உட்பட). அறுவைச் சிகிச்சையில் இரத்தம் இழக்கப்படும் அபாயம் அதிகம்.
- உங்களுக்கு மற்ற மருத்துவப் பிரச்சினைகள் இருத்தல், உதாரணத்திற்கு:
    - குறைந்த இரத்தவட்டுக்கள் (Low platelets -thrombocytopenia)
    - பரம்பரை இரத்த ஒழுக்கு நோய் (Haemophilia)
    - கல்லீரல் கோளாறு
    - சிறுநீரகக் கோளாறு
    - அண்மையில் அறுவை சிகிச்சை செய்திருத்தல்

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள். வயிறு பாதிக்காமலிருக்க, மருந்தை உணவுடன் எடுத்துக் கொள்ளுங்கள்.

மருந்தைச் சரியான முறையில் எடுக்கத் தெரியவில்லை என்றால், மருந்தாளரிடம் கேளுங்கள்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வரும் பக்க-விளைவுகள் ஏதாவது ஒன்று பாதித்தாலும், மருத்துவரை உடனே அழையுங்கள்:

- ஒவ்வாமைப் பாதிப்பு – தோல் அரித்தல், முகம் அல்லது கைகள் வீங்குதல், வாய் அல்லது தொண்டை வீங்குதல் அல்லது சிலிர்த்தல், மார்பு இறுக்கம் அல்லது சுவாசிக்கச் சிரமப்படுதல்
- தோலில் சிவந்த தடிப்புகள் உண்டாகி அவை உரிந்து புண்ணாகுதல்
- கரும் பழுப்பு நிற சிறுநீர் அல்லது வெளுத்த மலம்
- காய்ச்சல், குளிர் நடுக்கம், தொண்டைப் புண்
- கை, கால் அல்லது பாதம் மரத்தல், சிலிர்த்தல் அல்லது எரிந்து வலித்தல்
- தோலில் செம்புள்ளிகள் தோன்றுதல்
- கடுமையான வயிற்றுப்போக்கு, குமட்டல், வாந்தி, பசியின்மை, அல்லது மேல் வயிறு வலித்தல்
- வழக்கமில்லாத இரத்தப்போக்கு, காயம் அல்லது பலவீனம்
- தோல் அல்லது கண்கள் மஞ்சள் நிறமாதல்

பின்வரும் சாதாரணப் பக்க-விளைவுகள் ஏற்பட்டால், மருத்துவரைப் பாருங்கள்:

- வயிறு உப்புசம், வாயுத் தொல்லை, வயிற்று வலி அல்லது பாதிப்பு
- தலைச் சுற்றல்
- சிறிதளவு வயிற்றுப்போக்கு, குமட்டல், வாந்தி, பசியின்மை
- சிறிதளவு தோல் தடிப்புகள்

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

இந்த மருந்து உங்கள் உடலிலுள்ள குறிப்பிட்ட வகை இரத்த அணுக்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். இதனால், நீங்கள் எளிதில் காயமடையலாம்/எளிதில் இரத்தம் கசியலாம். எனவே, டைகுளோபிடீன் அல்லது குளோபிடோகிரெல் எடுக்கும்போது இரத்தப் பரிசோதனைகள் செய்து, இந்தப் பக்க-விளைவுகள் ஏற்படாமலிருப்பதைக் கண்காணிப்பது முக்கியம். உங்கள் மருத்துவர் இந்த இரத்தப் பரிசோதனைகளுக்கு ஏற்பாடு செய்வார். இந்தப் பரிசோதனைகள் எதையும் தவற விடாதீர்கள். முதல் 3 மாதச் சிகிச்சைக்குப் பிறகு, இரத்தப் பரிசோதனைகளை நீங்கள் அவ்வளவு அடிக்கடி செய்து கொள்ளத் தேவை இருக்காது.

இந்த மருந்து எடுத்து வருவதை உங்களின் மருத்துவர்கள், பல் மருத்துவர்கள், தாதிகள், மற்றும் மருந்தாளர்களிடம் தெரிவியுங்கள். டைகுளோபிடீன் அல்லது குளோபிடோகிரெல் மருந்து, பல் சிகிச்சை உட்பட, எல்லா அறுவை சிகிச்சைகளிலும் கடுமையான இரத்தப்போக்கு ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கச் செய்யலாம். எனவே, அறுவை சிகிச்சைக்கு முன்பாக இந்த மருந்தை நீங்கள் நிறுத்த வேண்டியிருக்கலாம்.

மற்ற மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்: முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமும் நேரடி வெளிச்சமும் படாதவாறு, அறை வெப்பநிலையில் ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.